ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2064/49 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01
*2064/49 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2018, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இவ்வட்டவணையின் III ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியொன்றுக்கு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2017.10.02 ஆந் திகதிய 2039/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவு 2018, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, மாச்சு 29.*


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் | III ஆம் நிரல் |
|---|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு | செல்லுபடியாகும் காலம் |
| | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | | |
| 01. | 07.01 | 0701.90 | உருளைக் கிழங்கு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 30.00 | மூன்று (03) மாத காலப் பகுதியொன்றுக்கு |
| 02. | 10.06 | | அரிசி | | |
| | | 1006.20 | உமி அகற்றிய அரிசி (தவிடு நீக்காத அரிசி) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 | 31 நாட் காலப்பகுதி யொன்றுக்கு |
| | | 1006.30 | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப் பட்ட அரிசி, மெருகூட்டப்பட்டவை அல்லது மெருகூட்டப்படாதவை, பளபளப்பாக்கப்பட்டவை அல்லது பளபளப்பாக்கப் படாதவை. | | 31 நாட் காலப்பகுதி யொன்றுக்கு |
| | | 1006.30.10 | பச்சை அரிசி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 | |
| | | 1006.30.20 | குத்தரிசி (சிவப்பு அல்லது | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 | |
| | | 1006.30.30 | சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 | |
| | | 1006.40 | உடைத்த அரிசி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 0.25 | |
| 03. | 04.03 | 0403.10 | யோகட் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 625.00 | ஆறு (06) மாத காலப் பகுதியொன்றுக்கு |
| | | 0403.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 625.00 | |
| 04. | 04.05 | 0405.10 | வெண்ணெய்க் கட்டி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 880.00 | |
| | | 0405.20 | பால் பரவற் பொருட்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 880.00 | |
| | | 0405.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 880.00 | |
| 05. | 07.03 | 0703.20 | உள்ளி (வெள்ளைப் பூடு) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 40.00 | |
| 06. | 08.05 | 0805.10.10 | புதிய தோடம்பழங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 65.00 | |
| 07. | 08.06 | 0806.10 | புதிய திராட்சைப் பழங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 130.00 | |
| 08. | 08.08 | 0808.10 | புதிய அப்பிள்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 45.00 | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* | *செல்லுபடியாகும் காலம்* |
| | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | | |
| *09.* | *09.10* | *0910.99.10* | வெந்தயம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா *50.00* | ஆறு (06) மாத காலப் பகுதியொன்றுக்கு |
| *10.* | *11.02* | *1102.90.20* | குரக்கன் மா | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா *150.00* | |
| *11.* | *12.02* | *1202.42* | வேர்க்கடலை - கோது நீக்கியவை, உடைக்கப்பட்டவை அல்லது உடைக்கப்படாதவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா *112.00* | |
| *12.* | *12.07* | *1207.50* | கடுகு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா *62.00* | |
| *13.* | *25.01* | *2501.00* | உப்பும் (மேசை உப்பும், இயல் பிழந்த உப்பு உட்பட) தூய சோடியம் குளோரைட்டும், திரவக் கரைசலாக அல்லது சேர்க்கப்பட்ட தடிப்படைவதை எதிர்க்கும் காரணிகள் அல்லது இலகுவாகப் பாய்வதை ஊக்கு விக்கும் காரணிகள் சேர்க்கப் பட்டவை அல்லது இம் மூன்று நிலைகளிலும் இல்லாதது, கடல் நீர் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா *40.00* | |

*04-711*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.